# நியூசிலாந்தின் துணைப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான HE திரு. வின்ஸ்டன் பீட்டர்ஸின் அதிகாரப்பூர்வ இந்திய பயணம்

## (மார்ச் 10-13, 2024)

மார்ச் 08, 2024

1. நியூசிலாந்தின் துணைப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான HE திரு. வின்ஸ்டன் பீட்டர்ஸ் அவர்கள் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் (EAM) டாக்டர். எஸ் ஜெய்சங்கர் அவர்களின் அழைப்பின் பேரில் 2024 மார்ச் 10 முதல் 13 வரை இந்தியாவுக்கு அதிகாரப்பூர்வப் பயணம் மேற்கொள்கிறார். 2023 நவம்பரில் நியூசிலாந்தில் புதிய அரசு பதவியேற்ற பிறகு, துணைப் பிரதமர் பீட்டர்ஸ் அவர்கள் தனது முதல் இந்தியப் பயணமாக அகமதாபாத் மற்றும் புது தில்லிக்கு பயணம் மேற்கொள்கிறார். இதற்கு முன்னதாக 2020 பிப்ரவரியில் துணைப் பிரதமராகவும், வெளியுறவு அமைச்சராகவும் அவர் இந்தியாவுக்கு பயணம் செய்திருந்தார்.

2. அகமதாபாத்தில், துணைப் பிரதமர் பீட்டர்ஸ் அவர்கள் 2024 மார்ச் 11 அன்று குஜராத்தின் அரசியல் தலைமையை சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பின்னர் புது தில்லியில், EAM மற்றும் துணைப் பிரதம மந்திரி பீட்டர்ஸ் ஆகியோர் 2024 மார்ச் 12 அன்று இருதரப்பு சந்திப்பை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம், நியூசிலாந்து உடனான நமது இருதரப்பு உறவுகளின் முழு அளவையும் விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் துணைப் பிரதம மந்திரி பீட்டர்ஸ் அவர்கள் தனது இந்திய பயணத்தின் போது மற்ற உயர் அதிகாரிகளுடனும் சந்திப்புகளை நடத்த உள்ளார்.

3. இந்தியாவும், நியூசிலாந்தும் ஜனநாயக பாரம்பரியத்தின் பொதுவான தன்மைகள் மற்றும் பகிரப்பட்ட மதிப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் வலுவான மக்கள் நட்புறவைப் பகிர்ந்து கொள்கின்றன. மேலும் வர்த்தகம் மற்றும் பொருளாதாரம், தற்காப்பு மற்றும் பாதுகாப்பு, கல்வி மற்றும் ஆராய்ச்சி, சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றம்

உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளும் ஒத்துழைத்து வருகின்றன.

**புது தில்லி**
**மார்ச் 08, 2024**